## <u>மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவை விதி 110ன் கீழ் அளிக்கும் அறிக்கை</u>

பொருள்: நகர்புற வளர்ச்சி – சாலை போக்குவரத்து மேம்படுத்துதல் குறித்த மாநில அளவிலான குழு – தொடர்பாக.

குறுகிய கால (ம) நீண்ட கால நடவடிக்கைகள் மூலமாக சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் சாலை போக்குவரத்தினை மேம்படுத்தவும், அதன் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கும், தலைமைச்செயலாளர் அவர்கள் தலைமையில், அலுவலர்கள் (ம) நிபுணர்கள் அடங்கிய மாநில அளவிலான குழு அமைப்பதன் அவசியம் குறித்து அரசு ஆய்வு செய்தது.

2. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத்தலைவர் அவர்கள் அனுப்பிய கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, அரசாணை (நிலை) எண்.144, வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சி துறை, நாள் 23.4.07ல் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் சாலை போக்குவரத்தினை மேம்படுத்த குறுகிய கால (ம) நீண்ட கால நடவடிக்கைகள் எடுப்பது குறித்து ஆலோசனைகளை வழங்கவும், அதன் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், தலைமைச்செயலர் அவர்கள் தலைமையில் பின்வரும் உறுப் பினர்கள் அடங்கிய சாலைப்போக்குவரத்து மேம்படுத்துதல் குறித்து மாநில அளிவலான குழுவை அமைத்துள்ளது.

1. அரசு தலைமைச்செயலர் தலைவர்
2. துணைத்தலைவர், சென்னைப் பெருநகர வளர்ச்சிகுழுமம்
3. அரசு செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை
4. அரசு செயலர், போக்குவரத்துத் துறை
5. அரசு செயலர், நெடுஞ்சாலைத் துறை அமைப்பாளர்
6. இணை ஆணையர், காவல் (போக்குவரத்து) துறை
7. ஆணையர், சென்னை மாநகராட்சி
8. ஆணையர், நகராட்சி நிர்வாகம்
9. மேலாண்மை இயக்குநர், மாநகரப் போக்குவரத்துக்கழகம்
10. பேராசிரியர் (டாக்டர்) அனந்தராஜன் பி.எச்.டி.,(ஓய்வு) (நகர்புற பொறியியல்) அண்ணா பல்கலைக்கழகம்
11. டாக்டர் திருமூர்த்தி, பேராசிரியர், அண்ணா பல்கலைக்கழகம்
12. டாக்டர் தமிழரசன், பேராசிரியர், போக்குவரத்துத்துறை, இந்திய தொழில்நுட்பக்கழகம்

மேற்கண்ட நகரங்களில் போக்குவரத்து நெரிசலை போக்கவும் சாலை இணைப்பை மேம்படுத்தவும், குறுகிய கால (1–2 வருடங்கள்) (ம) நீண்ட கால அடிப்படையில், திட்டங்களின் தொகுப்புடன் தேவையான வழிமுறைகளைக் கண்டறிய மேற்கண்ட குழுவினை அரசு பணித்துள்ளது. மாநில அளவிலான குழு, தனது இறுதி பரிந்துரைகளை 6 மாதத்திற்குள் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.